1969 மார்ச் 24]

* 432—வினா—திரு சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் குறிச்சி கிராமத்தில் உள்ள காலி இடங்களை பட்டா செய்து கொடுக்க கேட்டு 8—6—1966-ல் முன்னாள் இராணுவத்தினிடமிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, குறிச்சி கிராமத்தில் புறம்போக்கு இடம் இருக்கிறது. இனிமேலாவது, விண்ணப்பித்துக்கொள்பவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 8—6—1966 அன்று விண்ணப்பம் வந்துள்ளதா என்பதுதான் கேள்வி. அப்பொழுது வரவில்லை என்பதைத்தான் சொல்கிறேன். நிலம் இருக்கிறது என்றால் கண்டிப்பாக அரசாங்கத்தின் கொள்கை, கூடுமானவரையில் இதைக் கொடுப்பதற்கு ரொம்ப விரைவாகவும், துரிதமாகவும் 10, 15 ஆண்டுக்காலத்தில் நடைபெறாத நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, கவனிக்கப்படும் என்றுதான் பொருள்.

திரு ஆர். நாகசுந்தரம் : தலைவரவர்களே, முந்தைய சர்க்கார் ஓரிடத்தை முன்னாள் இராணுவத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அதே இடத்தில் தியாகிகளுக்கும் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த இடத்தை வேறு தனி நபர்கள் அனுபவித்து வருவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? இப்படிப்பட்ட பல குளறுபடிகள் பட்டா வழங்குவதிலே உள்ளதால் தான் நமது அரசு பட்டா வழங்க முடியவில்லை. ஆகவே, நீண்ட நாட்களாக யார் உள்ளார்களோ அவர்களுக்கே பட்டா செய்வதற்கு நமது அரசு முன் வருமா ?

(விடை இல்லை).

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, இந்த பட்டா கொடுக்கின்ற நேரத்தில் அங்குள்ள பஞ்சாயத்துக்களுடைய தீர்மானம் தேவை என்று சொல்கிறார்கள். ஆனால் வேண்டுமென்றே பஞ்சாயத்து தடுத்து விடுகிற தீர்மானத்தை போட்டுவிடுகிறது. அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது மாற்றுமுறையைக் கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை முழுவதும் நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. "வேண்டுமென்றே" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். "வேண்டுமென்றே" என்றால் அது யோசிக்கவேண்டிய பிரச்னையே தவிர, பஞ்சாயத்து போர்டுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன. பஞ்சாயத்து போர்டிலே சில புறம்போக்கு நிலங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பஞ்சாயத்து நலன்களுக்கும் தனிப்பட்டவர்களுடைய நலன்களுக்கும் முரண்பாடு வருகிற நேரத்தில் எந்த நலன்கள் பொது மக்களுக்கு இசைந்தவை என்பதை ஒட்டித்தான் இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

Tax exemption for certain film shows.

*433—*Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether tax exemption has been granted for film shows organised in connection with Flag Day celebrations during 1967–68 ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம்.